## அப்பாச்சியாரண்ணா

## வாழி திருநாமம்

சிங்கத்தில் அத்த நாள் சிறக்க வந்தோன் வாழியே
சீரங்கம் திருப்பதியில் அவதரித்தான் வாழியே
துங்க மதிள் கச்சி நகர் அமர்ந்த செல்வன் வாழியே
தூய்மையுடன் சீபாடியம் தொகுத்துரைப்போன் வாழியே
பொங்கு புகழ் எதிராசன் அருள் பெறுவோன் வாழியே
புகழுடைய கந்தாடைக் குல விளக்கோன் வாழியே
சங்கு வண்ணம் மாமுனி தாள் அடைந்த செல்வன் வாழியே
சந்ததமும் அண்ணாவின் தாள் இணைகள் வாழியே

---